Tamil தமிழ்

## Know Your Rights

# உங்களின் உரிமைகளை தெரிந்துகொள்ளுங்கள்

### What to Do if You're Stopped by Immigration Officers

### குடியுரிமை அதிகாரிகள் உங்களை நிறுத்தினால் நீங்கள் செய்யவேண்டியது

Keep this card handy! If you have a immigration encounter, you can protect yourself.

இந்த அட்டையை எளிதாக எடுக்குமாறு வைத்துக்கொள்ளுங்கள்!

This card explains your rights when you are in contact with immigration enforcement officers in New York State. Unless stated otherwise, it applies to both documented and undocumented immigrants, as well as United States citizens. The information in this card does not apply to encounters with immigration officers at the border, international airports or at any other port of entry into the United States. The information in this card does apply to encounters with immigration officers inside the United States, including encounters with immigration officers on domestic trains and buses or in your local community, and encounters with Immigration and Customs Enforcement ("ICE") and border patrol agents after you have been stopped by local police.

ஒரு குடியுரிமை அதிகாரியை சந்திக்க நேர்ந்தால், உங்களுக்கு பாதுக்காப்பாக இருக்கும். நியூ யார்க்யில், குடியுரிமை அதிகாரிகளுடன் சந்திக்க நேர்ந்தால், இந்த அட்டை உங்களது உரிமைகளை விளக்கும். குறிப்பிடாத வரையில்; ஆவணங்களோடும், ஆவணங்கள் இல்லாத குடியேற்றியவர்களுக்கும், அமெரிக்க குடியுரிமை உள்ளவர்களுக்கும், இவ்வுரிமைகள் பொருந்தும். நீங்கள் குடியுரிமை அதிகாரிகளை, நாட்டின் எல்லைகள், சர்வதேச விமான நிலையங்கள், அல்லது வேறெந்த நுழைவு இடங்களிலும் சந்தித்தால், இந்த அட்டையில் இருக்கும் விபரங்கள் பொருந்தாது. நீங்கள் அமெரிக்காவின் எல்லைகளுக்குள் குடியுரிமை அதிகாரிகளை சந்தித்தால் (அதாவது உள்நாட்டு ரயில் வண்டிகளில், பேருந்துகளில் அல்லது உள்ளூர் சமூகங்களில்) அல்லது உள்ளூர் காவல்துறையால் நிற்கப்பட்டபின், மீண்டும் குடியுரிமை சுங்கவரி துறை ("ICE") மற்றும் எல்லை காவல்துறையினரால் நிற்கப்பட்டால், இந்த அட்டையில் இருக்கும் விபரங்கள் பொருந்தும்.

Remember, what you say to immigration officers can be used against you in court, and it can give immigration officers a reason to arrest you. So make sure to read this card and keep it handy as you travel across New York State!

நீங்கள் குடியுரிமை அதிகாரிகளிடம் கூறும் அனைத்தும் உங்களுக்கு எதிர்மறையாக நீதி மன்றத்தில் உபயோக படுத்தப்படலாம், அவ்வார்த்தைகள் அதிகாரிகளுக்கு உங்களை கைது செய்வதற்கான வாய்ப்பைக் கொடுக்கலாம் என்று நினைவில் வைத்துக்கொள்ளுங்கள. அதனால், நீங்கள் நியூ யார்க் மாநிலத்தில் பயணம் செய்தால், இந்த அட்டையைப் படித்து, எப்பொழுதும் உங்களுடன் வைத்துக்கொள்ளுங்கள்!

**If You Are Arrested by Immigration Officers:**

**குடியுரிமை அதிகாரிகள் உங்களை கைது செய்தால்:**

1. You have the right to remain silent. You do not have to answer questions. You can tell the officer that you want to speak with a lawyer before answering any questions. You may say, "I will remain silent until I speak to an attorney." You do not have the right to an appointed free lawyer, but you do have the right to talk to a lawyer and to hire one on your own.

1. நீங்கள் அமைதியாக இருக்க உங்களுக்கு உரிமை உண்டு. அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் பதில் கூற அவசியம் இல்லை. கேள்விகளுக்கு பதில் கூறும் முன் ஒரு வழக்கறிஞரிடம் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்ளலாம். நீங்கள் "நான் ஒரு வழக்கறிஞரிடம் பேசும்வரை அமைதியாக இருப்பேன்" என்று கூறலாம். உங்களுக்கு நியமதிக்கப்பட்ட இலவச வழக்கறிஞர் கிடைப்பதற்கு உரிமை இல்லை, ஆனால் வழக்கறிஞரிடம் பேசவும், உங்களுக்கு வாதாடும்படி வழக்கறிஞரை நியமிக்கவும் உரிமை உண்டு.

2. You do not have to sign anything giving up your rights, and should never sign anything without reading it first and understanding the consequences of signing it. Signing a document without understanding it could result in you being deported before you see a lawyer or a judge.

2. உங்கள் உரிமைகளை துறக்கும்படி, எதிலும் கையெழுத்து போட அவசியமில்லை. எப்பொழுதும் படிக்காமல், பின்விளைவுகளைப் புரிந்துகொள்ளாமல், எவற்றிலும் கையெழுத்து போடாதீர்கள். ஆவணத்தை புரிந்துகொள்ளாமல் கையெழுத்தை போட்டால், நீங்கள் ஒரு வழக்கறிஞரோ நீதிபதியையோ பார்க்கும் முன், நீங்கள் நாடுகடத்தப்படலாம்.

3. Talk to a lawyer before signing anything or making a decision about your situation. If possible, carry with you the name and telephone number of a lawyer who will take your calls. Immigration law is hard to understand. You may have options that immigration officers will not explain.

3. எதிலும் கையெழுத்து போடும் முன் அல்லது உங்களது நிலமையைப் பற்றி முடிவு செய்யும் முன் வழக்கறிஞரிடம் பேசுங்கள். முடிந்தால், உங்களின் அழைப்புகளை எடுத்து பதில் கூறும் வழக்கறிஞரின் தொலைபேசி எண்ணும், பெயரும் உங்களுடன் வைத்துக்கொள்ளுங்கள். குடியுரிமை சட்டங்களைப்

புரிந்துகொள்வது கடினம். அதிகாரிகள் கூறப்படாத வழிகள் உங்களிடம் இருக்கலாம்.

4. If you are not a U.S. citizen, you have the right to call your consulate or to have a law enforcement officer tell consulate officials of your arrest. Law enforcement officers must let your consulate visit or speak with you if consular officials decide to do so. Your consulate might be able to help you find a lawyer.

4. நீங்கள் ஒரு அமெரிக்க குடிமகன்/குடிமகளாக இல்லாவிட்டால், உங்கள் அந்நிய நாட்டுப் பிரதிநிதியின் காரியாலயத்தை அழைக்கலாம், அல்லது ஒரு அதிகாரி நீங்கள் கைதுசெய்ய பட்டத்தை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளும் உரிமை உங்களுக்கு உள்ளது. காரியாலய அதிகாரிகள் உங்களை சந்திக்கவோ அல்லது பேசவோ முடிவு செய்தால், சட்ட அதிகாரிகள் நீங்கள் சந்திக்க அனுமதி கொடுக்க வேண்டும். உங்கள் காரியாலயம் உங்களுக்கு ஒரு வழக்கறிஞரை நியமிக்க உதவலாம்.

### If an Immigration Officer Asks You Questions:

### ஒரு குடியுரிமை அதிகாரி உங்களை கேள்வி கேட்டால்:

1. You have the right to remain silent. You do not have to answer questions asked by immigration officers if you do not want to answer them. This includes questions about your citizenship status, birthplace or place of residence. If you are asked about your immigration status and you wish to remain silent, you may say: “I have the right to remain silent.”

1. நீங்கள் அமைதியாக இருக்க உங்களுக்கு உரிமை உண்டு. உங்களுக்கு பதில் கூற விருப்பம் இல்லையென்றால் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் பதில் கூற அவசியம் இல்லை. குடியுரிமை நிலை, பிறந்த இடம், தங்கும் இடம்: போன்ற கேள்விகளுக்கும் நீங்கள் பதில் கூற அவசியம் இல்லை. உங்களது குடியுரிமை நிலையை பற்றி அதிகாரிகள் கேள்விகேட்கும் நேரத்தில், நீங்கள் பதில் கூறாமல் இருக்க விரும்பினால், “எனக்கு அமைதியாக இருக்க உரிமை உண்டு. (I have the right to remain silent.)” என்று கூறலாம்.

2. Always remember that even if you answered some questions, you can still decide that you do not want to answer any additional questions.

2. ஏற்கனவே நீங்கள் சில கேள்விகளுக்கு பதில் கூறியிருந்தாலும், மற்ற கேள்விகளுக்கு நீங்கள் எந்த நேரத்திலும் பதில் கூறாமல் இருந்துகொள்ளலாம்.

3. Never lie. Do not falsely claim to be a U.S. citizen or to be lawfully in the United States.

3. ஒருபோதும் பொய் கூறாதீர்கள். நீங்கள் ஒரு அமெரிக்க குடிமகன்/குடிமகளாக அல்லது சட்டப்படி அமெரிக்காவில் இல்லாவிட்டால், இருப்பதாக பொய் சொல்லாதீர்கள்.

**If an Immigration Officer Asks You for Immigration Documents:**

**ஒரு குடியுரிமை அதிகாரி உங்களுடைய குடியுரிமை ஆவணங்களை காட்டும்படி கேட்டால்:**

1. If you are a United States citizen, you do not need to show any documents. You should say, politely, “I am a United States citizen.” You may choose to show documentation, such as your New York driver’s license, which proves that you lawfully reside in the United States.

1. நீங்கள் ஒரு அமெரிக்க குடிமகன்/குடிமகளாக இருந்தால், உங்களது ஆவணங்களை காண்பிக்க தேவையில்லை. "நான் ஒரு அமெரிக்க குடிமகன்/குடிமகள் (I am a United States citizen),” என்று அமைதியாக கூறவேண்டும். நீங்கள் உங்களுடைய ஆவணங்களை காட்ட விருப்பப்பட்டால், காட்டலாம் – உதாரணமாக, உங்கள் நியூ யார்க் ஓட்டுநர் உரிமத்தை காட்டலாம், அது நீங்கள் அமெரிக்காவில் சட்டப்படி இருப்பதை நிரூபிக்கும்.

2. If you are undocumented and do not have valid U.S. immigration documents, remember that you have the right to remain silent. You can decide not to answer questions about your immigration status or whether you have immigration documents. If you tell an immigration officer that you are not a U.S. citizen and you cannot produce valid U.S. immigration documents, there is a good chance you will be arrested.

2. உங்களிடம், வேண்டிய அமெரிக்க குடியுரிமை ஆவணங்கள் இல்லையென்றால், நீங்கள் அமைதியாக இருக்க உங்களுக்கு உரிமை உண்டு என்று நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். உங்களது குடியுரிமை நிலையை பற்றி அல்லது தேவைப்பட்ட ஆவணங்கள் உங்களிடம் உண்டா என்பதை பற்றி கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் பதில் கூறாமல் இருக்கலாம். ஒரு குடியுரிமை அதிகாரியிடம் நீங்கள் அமெரிக்க குடிமகன்/குடிமகள் இல்லையென்று தெரிவித்து, உங்களால், தேவைப்பட்ட குடியுரிமை ஆவணங்களை காண்பிக்க முடியவில்லை என்றால், உங்களை கைது செய்வதற்கு வாய்ப்பு உண்டு.

3. If you are a documented immigrant who is 18 or older and have been issued valid U.S. immigration documents (such as an unexpired permanent resident card, also known as a “green card”), you are legally required to carry those documents with you at all times. If you have your valid U.S. immigration documents and you are asked for them, it is usually a good idea to show them to avoid arrest. Failure to carry valid immigration documents is a misdemeanor crime.

3. நீங்கள் 18 வயதிற்கு மேல் இருக்கும் ஒரு குடியுரிமை பெற்றவராக இருந்து, உங்களிடம் தேவைப்பட்ட குடியுரிமை ஆவணங்கள் (உதாரணமாக: காலாவதி ஆகாத நிரந்தர குடிமகன்/குடிமக்களின் அடையாளச்சிட்டு, அல்லது "க்ரீன் கார்டு") இருந்தால், சட்டப்படி அந்த ஆவணங்களை உங்களிடம் எந்த நேரத்திலும் இருக்கவேண்டும். ஒரு அதிகாரி உங்களுடைய ஆவணங்களை கேட்டு, நீங்கள்

வைத்திருந்தால், கைது செய்யப்படாமல் இருப்பதற்கு அதை காட்டுவது நல்லது. அந்த ஆவணங்கள் வைத்துக்கொள்ளாமல் இருப்பது சட்டப்படி குற்றமாகும்.

4. If you are arrested because you do not have your valid U.S. immigration documents with you, but you have them elsewhere, ask a friend or family member to bring them to you.

4. நீங்கள் தேவையான ஆவணங்களை உங்களுடன் வைத்துக்கொள்ளாததால் கைது செய்யப்பட்டால், வேறு இடத்தில் இருந்து உங்களது நண்பரையோ அல்லது குடும்பத்தில் ஒருவரையோ கொண்டு வரும்படி கேட்டுக்கொள்ளுங்கள்.

5. Never show an officer fake immigration documents or pretend that someone else's immigration documents are yours.

5. ஒருபோதும் பொய்யான குடியுரிமை ஆவணங்களை அல்லது வேறொருவரின் ஆவணங்களை உங்களுடையதாக பொய் சொல்லி அதிகாரியிடம் காட்டாதீர்கள்.

Visit www.nyclu.org to learn more about the NYCLU's work to defend immigrants' rights. If you feel that your rights have been violated during an interaction with an immigration officer, please call your local NYCLU office:

குடியேறிவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு NYCLU செய்யும் வேலைகளைத் தெரிந்துகொள்ள www.nyclu.org பாருங்கள். குடியுரிமை அதிகாரியிடம் பேசும் பொழுது, உங்களுடைய உரிமைகள் மதிக்கபடாததாக உங்களுக்கு தோன்றினால், உங்களின் உள்ளூர் NYCLU அலுவலகத்தை அழையுங்கள்:

Headquarters and New York City Office: (212) 607-3300

Capital Region Chapter (Albany): (518) 436-8594

Central New York Chapter (Syracuse): (315) 471-2821

Genesee Valley Chapter (Rochester): (585) 454-4334

Lower Hudson Valley Chapter (White Plains): (914) 997-7479

Nassau County Chapter (Hempstead): (516) 741-8520

Suffolk County Chapter (Central Islip): (631) 650-2301

Western Regional Office (Buffalo): (716) 852-4033

நியூ யார்க் நகர அலுவலகம் மற்றும் தலைமையகம்: (212) 607-3300

தலைநகர வட்டார அத்தியாயம் (Albany/அல்பனி): (518) 436-8594

மத்திய நியூ யார்க் அத்தியாயம் (Syracuse/சைரகூஸ்): (315) 471-2821

ஜெனெசீபள்ளத்தாக்கு அத்தியாயம் (Rochester/ரோசெஸ்டர்): (585) 454-4334

கீழ் ஹட்சன் பள்ளத்தாக்கு அத்தியாயம் (White Plains/வைட் ப்லேன்ஸ்): (914) 997-7479

நஸ்ஸாவ் மாவட்ட அத்தியாயம் (Hempstead/ஹெம்ப்ஸ்டெட்): (516) 741-8520

சஃபோல்க் மாவட்ட அத்தியாயம் (Central Islip/சென்ட்ரல் இஸ்லிப் ): (631) 650-2301

மேற்கத்திய வட்டார அலுவலகம் (Buffalo/பஃபோலோ): (716) 852-4033

**Pro bono translation provided by Krandhasi Kodaiarasu (SLC Volunteer Translation Services: slctranslationservices@gmail.com)**